SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

## 2015 யூலை - AA1 பரீட்சை

**(July 2015 Examination - AA1 Level)**

**வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்**

**பாட இலக்கம் : 13**

# வணிகத்துக்கும் கணக்கீட்டுக்குமான பொருளியல் (EBA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA1 பரீட்சை – 2015 யூலை

## (13) வணிகத்துக்கும் கணக்கீட்டுக்குமான பொருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**

### வினா 1 க்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் 1.1

| வினா எண் | விடை |
|---|---|
| 1.1 | 3 |
| 1.2 | 2 |
| 1.3 | 2 |
| 1.4 | 1 |
| 1.5 | 3 |

நுகர்வோன் மிகை $= \frac{\text{(உச்சக் கேள்விக்கான விலை - சமநிலை விலை) x சமநிலை தொகை}}{2}$

$= \frac{(20 - 10) \times 15}{2}$

$= 75 \rightarrow 3$

| | | | |
|---|---|---|---|
| 1.6 | 3 | | |
| 1.7 | 3 | | |
| 1.8 | 2 | | |
| 1.9 | 3 | | |
| 1.10 | 2 | | |
| 1.11 | சரி | | |
| 1.12 | பிழை | | |
| 1.13 | பிழை | | |
| 1.14 | சரி | | |
| 1.15 | வளையி இடமாகவோ வலமாகவோ நகரும் | | |
| 1.16 | கிபன் பண்டம் | | |
| 1.17 | வரி / ஏறுமுக வரி | | |
| 1.18 | அலகுகள் நிறைபோட்டிச் சந்தையில் இலாபத்தை உச்சப்படுத்தல் | | |
| 1.19 | எல்லை இலாபம் (MP) | = | எல்லைக் கிரயம் (MC) |
| 1.20 | அதி மிகை இலாபம் | = | (விலை – சராசரி கிரயம); x தொகை |
| | | = | (45 - 40) x 5 |
| | | = | ரூ. 25 |

*பகுதி A முடிவு*

**பகுதி - B**

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**

## வினா 2 க்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) **மனித தேவைகள்**

1. மனித தேவைகள் என்பது உடல், உள இயல்பூக்க நிலைமைகளாகும். இவை மனிதனொருவன் உய்வதற்கு (Survival) கட்டாயம் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

   உதாரணம் : உணவு, உறையுள், உடை மருத்துவ வசதிகள்

2. இவை அனைவருக்கும் பொதுவானவை இவை ஒவ்வொருக்கொருவர் வேறுபடாது.
3. இவை எண்ணிக்கையில் வரையறுக்கப்பட்டது (தேவைகள் வரையறுக்கப்பட்டவை)
4. இவை மாற்றப்பட முடியாதவை இன்னொரு வகையில் கூறின் மனிதத் தேவைகளுக்கு மாற்றீடு இல்லை.

**மனித விருப்பங்கள்**

1. இவை மனித தேவைகளிலிருந்து உருவாகுபவை. மனித தேவைகளை நிறைவு செய்யக்கூடியவை வழிகள் விருப்பங்கள் எனப்படும். இவை உருவாக்கப்படக் கூடியவை அல்லது மனிதர்களால் பெறப்படக் கூடியவை.

   உதாரணம் : உணவு - வெதுப்பி, சோறு, கறி, இடியப்பம், போன்றன

   உடை - மேற்சட்டை, காற்சட்டை போன்றன

2. தனியான விருப்பங்கள் பொது விருப்பங்கள் போன்ற விருப்பங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொருக்கொருவர் வேறுபடும்.
3. இவை வரையறையற்றவை.
4. மனித விருப்பங்கள் நேரத்துக்கு நேரம் வேறுபடும். இவற்றில் விளம்பரம், பண்பு, புத்தாக்கம், போன்றன செல்வாக்குச் செலுத்தும்

b) எல்லா மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்ய முடியாத அளவில் வளங்கள் போதாமல் காணப்படல் அருமை எனப்படும். இவ்வெண்ணக்கரு மனித விருப்பங்களை கிடைப்பனவான வளங்களுடன் ஒப்பிடும் போது ஏற்படுகிறது. எந்த ஒரு பொருளாதாரத்திலும் அச்சமுகத்தின் அனைத்துத் தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்யகூடிய பொருட்களை, சேவைகளை உற்பத்தி செய்ய முடியாது. செல்வந்தரோ, ஏழையோ, பெரீதோ, சிறிதோ, வளர்ந்ததோ, வளரும் நாடோ, மேற்கோ, கிழக்கோ எல்லாச் சமூகங்களும் தவிர்க்கமுடியாத வகையில் அருமை பிரச்சனையை எதிர்கொள்கின்றன. அருமையான பொருளாதார வளங்களுக்கு போட்டி நிறைந்த வேறுபட்ட பயன்பாடுகள் காணப்படுகின்றன. எனவே எப்பொருட்கள் சேவைகளுக்கு வளங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது அருமையான வளங்களை போட்டியான பயன்பாடுகளுக்கிடையில் எவ்வாறு பகிர்வது என்பது தொடர்பான கற்கையாகும். வேறு வகையில் கூறின் பொருளியல் அருமை தொடர்பில் ஆராய்கிறது. அருமை எனும் முதன்மை கோட்பாட்டை அடியொற்றி மொத்த பொருளியல் கற்கையும் காணப்படுகிறது.

## வினா 3 க்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) நிறைபோட்டிச் சந்தை என்பது பாரிய எண்ணிக்கையில் கொள்வோரையும் விற்போரையும் கொண்ட நியம அல்லது ஓரின ஒபருட்களை வழங்கப்பட்ட விலையில் விற்கும் போட்டி நிறைந்த கற்பனைச் சந்தை மாதிரியாகும்.

இச் சந்தை அதிமிகை இலாபம் காணப்படும் குறுங்காலத்தில் நிறை அறிவு காரணமாகவும் நுழைவுத்தடை காணப்படாததாலும் அதிக நிறுவனங்களை உள்ளீர்க்கும். இதனால் சந்தை நிரம்பல் வளையி வலது பக்கம் நகரும் இது விலைக்குறைவை ஏற்படுத்தும் இவ் விலை வீழ்ச்சி நீண்ட காலத்தில் அதிகரித்து நிரம்பல் வளையி வலது பக்கம் நகரும் இந்த விலை வீழ்ச்சி நீண்ட காலத்தில் அதிமிகை இலாபத்தை இல்லாமல் செய்யும்.

குறுங்காலத்தில் நிறுவனமொன்று நட்டத்தை எதிர் கொள்ளுமாயின் வெளியேறத்தடை இன்மையால் அது சந்தையை விட்டு விலகும் எனவே சந்தை நிரம்பல் குறைந்து நிரம்பல் வளையி இடப்புறம் நகரும் இதனால் விலை அதிகரித்து நட்டம் நீங்கும் எனவே நீண்ட காலத்தில் போட்டி நிறுவனங்கள் சாதாரண இவாபத்தை உழைக்கக் கூடியதாய் இருக்கும்.

ஒரு போட்டி நிறுவனம் குறுங்காலத்தில் மிகை இலாபத்தை உழைக்கும் போது புதிய நிறுவனங்கள் உள்நுழையும். இது நிரம்பலை அதிகரித்து விலையைக் குறைக்கும் அதனால் நீண்ட காலத்தில் நிறுவனங்கள் சாதாரண இலாபத்தையே அனுபவிக்க முடியும்.




MR = எல்லை வருமானம்
AR = சராசரி வருமானம்

P1 விலையில் நிறுவனங்கள் மிகை இலாபத்தை உழைக்கின்றன. சந்தை நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பால் விலை P2 க்கு குறைவடைந்து மொத்த வருமானம் (TR) மொத்த செலவுக்கு (TC) சமனாகிறது. இதனால் நிறுவனங்களால் சாதாரண இலாபத்தையே உழைக்க முடிகிறது.

b) பின்வருவனவற்றுள் ஏதோனும் நான்கு பண்புகள்

1. ஒரு விற்பனையாளன் சந்தையில் காணப்படல் (தொழிற்றுறைக்கும் நிறுவனங்களுக்கும் வேறுபாடு இல்லை)
2. தனித்துவமான இல்லது பல்லினப் பொருட்கள் (கிட்டிய பதலீடுகள் இல்லை)
3. நுழைவுத்தடைகள் காணப்படும்.
4. நிறுவனம் விலையைத் தீர்மானிக்கும்
5. நிறைவற்ற சந்தைத் தகவல்கள் எனவே நிறைவான தகவலைப்பெற கிரயம் ஏற்படும்.
6. கீழ் நோக்கி வளையும் கேள்வி வளையி

## வினா 4 க்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) பணத்தின் பெறுமதியைத் தீர்மானிக்கும் போது பின்வருவனவற்றுள் இரு காரணிகள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

1. **பணத்தின் அகப்பெறுமதி (உட்பெறுமதி)**

இது இரு வகையாக பிரிக்கப்படும்

**அகமெய்பெறுமதி**

இது ஒரு அலகுப் பணத்தைக் கொண்டு உள்நாட்டுச் சந்தையில் வாங்கக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவைக் குறிக்கின்றது. பொதுவாக பணத்தின் பெறுமதி என்பது பணத்தின் அகமெய்பெறுமதியைக் குறிக்கின்றது.

**பணத்தின் அக உத்தியோகப் பூர்வ பெறுமதி**

இது நாணயத்தின் தாளில் அல்லது குற்றியில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் முகப் பெறுமதியைக் குறிக்கிறது.

2. **பணத்தின் புறப்பெறுமதி**

பணத்தின் புறப்பெறுமதியை இரு வகையளாகப் பிரிக்கலாம்

**பணத்தின் புறமெய்ப்பெறுமதி**

ஒரு அலகு உள்நாட்டு பணத்தைக் கொண்டு வெளிநாட்டுச் சந்தையில் வாங்கக் கூடிய பொருட்களை் சேவைகளின் அளவை இது குறிக்கிறது. இது உள்நாட்டு நாணயத்தின் புறக் கொள்வனவு வலுவாகும்.

**பணத்தின் உத்தியோகப்பூர்வ புறப்பெறுமதி**

இது பணத்தின் நாணயமாற்று விகிதத்தைக் குறிக்கிறது. இது ஒரு உள்நாட்டுப் பண அளகுக்கு பரிமாற்றப்படும் வெளிநாட்டு நாணயங்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

b) பின்வருவனவற்றுள் ஏதோனும் நான்கு

- Δ விரும்பத்தாக வகையில் வருமானத்தை மீளப்பகிரல்- ஓய்வுதியம் பெறுவோர் பாதகமான முறையில் அவர்களின் பேரம் பேசும் சக்தி குறைவதால் பாதிக்கப்படுவர். எனும் மாறும் வருமானம் உழைப்பேரின் பேரம் பேசும் சக்தி அதிகரிக்கும்.
- Δ பணவீக்கம் கடன் கொடுனரை பாதகமாக பாதிப்பதுடன் கடன்பெற்றோரன் நன்மை அனுபவிப்பார். கடன் பெறுனர், கொடுனரிடையில் வருமானம் மீள் பகிர்வு செய்யப்படும்.
- Δ தீர்மானம் எடுக்கும் செயன்முறை பாதகமாக பாதிக்கப்படும்.
- Δ நாணயமாற்றுத் தேய்வு ஏற்படும்
- Δ முழு வறுமை அதிகரிக்கும்.
- Δ நீண்ட கால முதலீடுகள் நிச்சயமற்ற நிலை காரணமாக குறைக்கப்பட்டு குறுங்கால முதலீடுகள் மீது நிதி ஒதுக்கப்படும்.
- Δ ஏற்றுமதியின் போட்டித்தன்மை பாதிப்புரும், நடைமுறைக் கணக்கின் குறை அதிகரிக்கும்
- Δ தொழிற் சங்க நடவடிக்கைகளால் நிச்சயமற்ற பொருளாதார நிலைமை உருவாக்கப்படும்.

## வினா 5 க்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) குறித்த காலப்பகுதியில் ஒரு நாட்டின் வதிவோருக்கும் ஏனைய நாடுகளின் வெளிநாட்டவருக்குமிடையான எல்லா ஊடு செயல்களையும் முறையாகப் பதியும் கூற்று சென்மதி நிலுவையாகும். இது பின்வரும் இரு முதன்மைக் கணக்குகளைக் கொண்டிருக்கும்.

- ▪ நடப்புக் கணக்கும் மூலதனக் கணக்கும்
- ▪ நிதிக் கணக்கும்

b) இலங்கையின் சென்மதி நிலுவை கடந்த காலங்களில் சாதகமற்ற மீதிகளையே கொண்டிருந்தது. அப்பாதக மீதியைக் குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ▪ புத்தாக்கம் மூலம் உற்பத்திகளை வேறுபடுத்தல்
- ▪ ஏற்றுமதிச் சந்தை விதிவாக்கம் ( மரபுச் சந்தை புதிய ஆசியச் சந்தைக்கு மாற்றப்பட்டுள்ளது.)
- ▪ ஆந்நிய பணவரவு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மூலம் அதிகரித்தல்
- ▪ வினைத்திறனான வெளிநாட்டு கடன் முகாமைத்துவம் மூலம் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியைக் குறைத்தல் முக்கியமான வணிக பங்காளர்களுடனான பணத்தின் புறப் பெறுமதியை நிலையாகப் பேணல்
- ▪ உணவு மற்றும் ஆடை இறக்குமதியைக் கட்டுப்படுத்த அதற்கான பதிலீடுகளை எற்பத்தி செய்தல்
- ▪ பன்நாட்டு போட்டித்தன்மையை அதிகரித்தலும் ஊக்கப்படுத்தலும்
- ▪ ஆராய்ச்சி விருத்தி மீதான முதலீட்டை அதிகரித்தல்
- ▪ இருபக்க பல்பக்க வர்த்தக உடன் படிக்கைகளை மெருகூட்டல்.

***பகுதி B முடிவு***

## பகுதி - C

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**

## வினா 6 க்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) வருமானச் சுற்றோட்டம் என்பது வீட்டுத் துறை, நிறுவனம் போன்ற பொருளாதார முகவரிடையே உற்பத்தி மூலம் பெறப்பட்ட வருமானங்களும் செலவுகளும் தொடர்ச்சியாக சுற்றோட்டம் செய்யப்படுவதைக் குறிக்கிறது. இது குறித்த காலப்பகுதியில் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி வருமானம் மற்றும் செலவு இடையிலான தொடர்பைக் காட்டுகிறது.




b) நடப்பு விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு பொருளாதாரம் குறித்த ஆண்டில் மேற்கொண்ட மொத்த உற்பத்தியை அல்லது மேலோங்கிய நடப்பு விலையில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை அல்லது உண்மையான நடப்பு விலையில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை குறிக்கிறது. இது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி எனவும் குறிப்பிடப்படும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கியது)

- பொருளாதாரத்தின் விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றம் ( பணவீக்க விளைவு)
- வெளியீட்டுத் தொகையில் மாற்றம் (மெய் விளைவு)

நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது பணவீக்க அல்லது விலை மாற்ற விளைவுகளை நீக்கிய பின் குறித்த ஆண்டில் உற்பத்தியின் தொகையை அளவிடுவதன் மூலம் கணிக்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியாகும். நிலையான விலையில் கணிக்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெறுமதியாகும் நிலையான விலையில் கணிக்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தயில் ஏற்படும் மெய் மாற்றத்தை காட்டுகிறது. இது இரு காலப்பகுதிகளில் உற்பத்தயில் ஏற்படும் மெய் மாற்றத்தை காட்டுவதால் இதனைக் கொண்டு பொருளாதார வளர்ச்சியை அளவிடுவர். இது பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\text{நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்த (மொ.உ.உ)} = \frac{\text{பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி (நடப்பு விலையில் மொ.உ.உ)}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி}} \times 100$$

c) i)

| துறைகளும் வியயங்களும் | ரூ. (மில்லியன்) |
|---|---:|
| விவசாயத்துறை | |
| விவசாயம், கால்நடைவளர்ப்பு, காட்டுத் தொழில் | 150 |
| மீன்பிடி | 50 |
| கைத்தொழில் துறை | |
| சுரங்கமும் வளையும் | 89 |
| உற்பத்தி | 75 |
| மின் எரிவாயு, நீர் | 40 |
| கட்டுமானம் | 58 |
| சேவைத்துறை | |
| மொத்த சில்லறை வியாபாரம் | 70 |
| உணவகமும் தங்ககமும் | 20 |
| போக்குவரத்தும் தொடர்பாடலும் | 60 |
| வங்கி, காப்புறுதி மற்றும் மனை | 40 |
| உரித்துரிமையும் குடிமனையும் | 10 |
| அரச சேவை | 10 |
| தனியார் சேவை | 13 |
| காரணிக்கிரயத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 685 |
| கூட்டு | |
| வெளிநாட்டிலிருந்தான நிகர காரணி வருமானம் | (10) |
| காரணி விலையின் மொத்த தேசிய உற்பத்தி | **675** |

aat SRI LANKA

ii)

| | ரூ. (மில்லியன்) |
|---|---:|
| காரணி விலையில் மொத்த தேசிய உற்பத்தி | 675 |
| கூட்டு | |
| நேரில் வரி | 30 |
| கழி | |
| உற்பத்தி மானியம் | (20) |
| சந்தைவிலையில் மொத்த தேசிய உற்பத்தி | 685 |

## வினா 7 க்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) பொருளாதார வளரச்சிக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் இடையான வேறுபாடுகள்

பொருளாதார வளரச்சி என்பது ஒரு பொருளாதாரத்தின் சாத்தியமான வெளியீட்டுக்கான உற்பத்தியை அதிகரிப்பதற்கான சாத்தியத்தை தொடர்ச்சியான காலப்பகுதியில் விரிவுபடுத்துவதை குறிக்கிறது. இது மெய் உள்நாட்டு உற்பத்தியில் தொடர்ச்சியாக ஏற்படும் அதிகரிப்பாகும்.

இது உற்பத்தி சாத்திய வளையியை வலப்புறம் நகர்த்தும்

பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தியின் தொகையையும் தரத்தையும் தொடர்ச்சியான காலப்பகுதியல் அதிகரிப்பதை குறிக்கிறது. அபிவிருத்தி செயன்முறையில் பொருளாதார வளரச்சி மட்டும் தேவையானது அல்ல. சமூகப்பண்பாட்டு ஏனைய கட்டமைப்பு மாற்றங்களில் ஏற்படும் முன்னோற்றமும். பொருளாதார அபிவிருத்தயில் இன்றியமையாததாகும்.

(B) பின்வரும் காரணிகள் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும். (ஏதோனும் நான்கு)

- வளப்பயன்பாட்டில் அதிகரிப்பு
- உற்பத்தி திறனில் அதிகரிப்பு
- பேரினப்பொருளாதார உறுதி (பணவீக்கத்தை கட்டுப்படுத்தல்)
- சாதகமான ஊக்குவிப்பு முறை பொருளாதாரத்தில் காணப்படல்
- முயற்சியாளர்களின் திறன் விருத்தி
- நல்லாட்சி
- அரசியல் உறுதி நிலை
- பொருளாதார சுதந்திரம்

(C) பின்வரும் முறைகளில் அரசு சமூகப் பொருளாதார மேம்பாட்டில் தலையிட முடியும்.

- பொது பண்டங்கள் சேவைகளை வழங்கள்
- மேம்பாட்டுப் பண்டங்கள் சேவைகளை வழங்கள்
- வெளிவாரி நன்மைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளின் உற்பத்தி நூகர்வை ஊக்குவித்தல் மேலும் வெளிவாரி தீமைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளின் உற்பத்தி நூகர்வைக் குறைத்தல்.
- குறைந்த வருமானம் பெறுவோருக்கு மானியம் வழங்கள்
- உட்கட்டுமான வசதிகளை வழங்கள்
- உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சாதகமான ஊக்குவிப்புக்களை வழங்கள்
- உச்ச விலை, இழிவு விலை, மானியங்கள் மூலம் சந்தையில் தலையிடல்.
- வெளிநாட்டு முதலீடுகளை தக்கவைக்கவும் பாதுகாக்கவும் தேவையான வசதிகளை வழங்கள்

**பகுதி *C* முடிவு**